தமிழியல் துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# பாடத்திட்டம்

2021 - 2022

# தமிழியல் துறை

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## திருநெல்வேலி -12

### தமிழ் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம் 2019-2020 கல்வி ஆண்டு முதல்

CBCS - M.A. and M.Phil. Tamil

### தெரிவுநிலைப் பாடத்திட்டம்

1. **முதுகலைத் தமிழ்: அனுமதித் தகுதி:** முதுகலைப் படிப்பில் மாணவர் சேர்க்கைக்குப் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் ஏற்புப் பெற்ற பல்கலைக்கழகங்கள் வழி இளங்கலைத் தமிழ், இளங்கலை இலக்கியம் (B.Litt.) அல்லது இவற்றிற்குச் சமமானப் பட்டங்களில் (10+2+3 என்ற காலமுறையில்) தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள் தகுதியுடையவராவர்.
2. இளங்கலை அல்லது இளம்அறிவியலில் இரண்டாண்டுகள் பகுதி 1 தமிழ் பயின்று தேர்ச்சிப் பெற்றவர்களுக்கும் வாய்ப்பளிக்கலாம். அவர்கள் பகுதி -1 தமிழ் மொழித் தாள்கள் (நான்கு பருவங்கள்) பயின்றிருக்க வேண்டும்.
3. **படிப்பின் அமைப்பு:** முதுகலைத் தமிழ் நான்கு பருவங்களைக் கொண்ட இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்பாகும்.
4. **பாடத்திட்ட அமைப்பு:** முதுகலைப் படிப்பு நான்கு பருவங்களைக் கொண்டு அமையும். ஒவ்வொரு பருவத்திலும் நான்கு மதிப்பலகுகள் கொண்ட நான்கு முதன்மைத் தாள்களும், மூன்று மதிப்பலகுகள் கொண்ட ஒரு விருப்பத்தாளும் இடம்பெறும். இரண்டாம் பருவத்திலும் மூன்றாம் பருவத்திலும் மூன்று மதிப்பலகுகள் கொண்ட பிறதுறைப் பாடங்கள் இடம்பெறும். நான்காம் பருவத்தில் எட்டு மதிப்பலகுகள் கொண்ட திட்டஏடு இடம்பெறும். ஆக, மொத்தம் திட்டஏட்டுடன் சேர்த்து 23 தாள்கள் 90 மதிப்பலகுகள் முதுகலையின் பாடத்திட்ட அமைப்பாகும்.

**4.1. மதிப்பீட்டுமுறை:** அகமதிப்பீடு. புறமதிப்பீடு எனத் தொடர் மதிப்பீட்டு முறை பின்பற்றப்படும். அகமதிப்பீடு 25 மதிப்பெண்கள்: மூன்று அகமதிப்பீட்டுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் கொண்ட இரு தேர்வுகளின் சராசரி 15, பருவக்கட்டுரை 6, திட்டக்கட்டுரை 4. புறமதிப்பீட்டுப் பருவத் தேர்வு 75 என மொத்தம் 100 மதிப்பெண்கள் ஒவ்வொரு தாளுக்கும் உரியது.

**4.2. வினாத்தாள் அமைப்பு:** மொத்தம் 75 மதிப்பெண்கள் கொண்ட புறமதிப்பீட்டுப் பருவத் தேர்வு வினாத்தாள் பகுதி அ, பகுதி ஆ, பகுதி இ என மூன்று பகுதிகளைக் கொண்டமையும்.

**பகுதி: அ** ;- ஒரு மதிப்பெண் கொண்ட 10 வினாக்கள் ஓரிரு சொற்களில் விடையளிக்கும் வகையில்.

**பகுதி: ஆ;-** 5 மதிப்பெண்கள் கொண்ட 5 வினாக்கள் உள் மாற்றுவினா அமைப்புடன் அமையும். எல்லாக் கூறுகளுக்கும் சம வாய்ப்பளிக்க வேண்டும்.

**பகுதி: இ;-** 8 மதிப்பெண்கள் கொண்ட ஐந்து வினாக்கள் உள் மாற்றுவினா அமைப்புடன் அமையும்.

**4.3. திட்ட ஏடு:** ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே திட்ட ஏட்டுப் பணியை மேற்கொள்ள வேண்டும். திட்ட ஏட்டை மூன்றாம் பருவத்தில் பருவத் தேர்வு தொடங்கும் முன் துறை அறிவிக்கும் நாளில் துறையில் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் துறை ஆசிரியர் ஒருவரின் நெறிப்படுத்துதலின்கீழ்த் திட்ட ஏட்டுப்பணியை மேற்கொள்ள வேண்டும். நெறியாளர், மாணவர் ஒதுக்கீடு போன்றவை துறை முடிவின்பாற்பட்டது. திட்டஏடு கணினி தட்டச்சில் 40 பக்கங்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும்.

**மதிப்பீட்டுமுறை:** திட்ட ஏடு 100 மதிப்பெண்களைக் கொண்டது. அகமதிப்பீடு 50 புறமதிப்பீடு 50 என அமையும். அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் நெறியாளரால் வழங்கப்படும். புறமதிப்பீட்டாளர் நெறியாளர் அல்லாத துறை ஆசிரியர் ஒருவராக அல்லது பிற நிறுவனம் சார்ந்த தகுதியுடைய ஆசிரியராக இருத்தல் வேண்டும். இதனைத் துறை முடிவு செய்து கொள்ளலாம்.

**5. ஆய்வியல் நிறைஞர்: அனுமதித் தகுதி:** ஆய்வியல் நிறைஞர் படிப்பில் மாணவர் சேர்க்கைக்குப் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் ஏற்புப் பெற்ற தமிழ்நாடு, இந்திய அளவிலான பல்கலைக்கழகங்கள் வழி முதுகலைத் தமிழ் அல்லது அவற்றிற்குச் சமமானப் பட்டங்களில் (10+2+3+2 என்ற காலமுறையில்) 50% மதிப்பெண் தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள் தகுதியுடையவராவர். அல்லது அவற்றிற்குச் சமமானப் பட்டங்களில் (10+2+3 என்ற காலமுறையில்) தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள் தகுதியுடையவராவர்.

**6. பாடத்திட்ட அமைப்பு:** ஆய்வியல் நிறைஞர் படிப்பு ஓராண்டு, இரண்டு பருவங்களுடன் 100 மதிப்பெண்கள் கொண்ட மூன்று தாள்களும் 200 மதிப்பெண்கள் கொண்ட ஆய்வேடு ஒன்றும் கொண்டமையும். முதற் பருவத்தில் மூன்று தாள்களும் இரண்டாம் பருவத்தில் ஓர் ஆய்வேடும் அமையும். ஒவ்வொரு தாளும் 5 கூறுகளைக் கொண்டமையும். தாள்கள் 4 மதிப்பலகுகளும் ஆய்வேடு 12 மதிப்பலகுகளும் கொண்டு மொத்தம் 24 மதிப்பலகுகள் கொண்ட பாடத்திட்ட அமைப்புடன் ஆய்வியல் நிறைஞர் படிப்பு வடிவமைக்கப் பெற்றுள்ளது.

**6.1. மதிப்பீட்டுமுறை:** அகமதிப்பீடு. புறமதிப்பீடு எனத் தொடர் மதிப்பீட்டு முறை பின்பற்றப்படும். அகமதிப்பீடு 25 மதிப்பெண்கள்: மூன்று அகமதிப்பீட்டுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் கொண்ட இரு தேர்வுகளின் சராசரி 15, பருவக்கட்டுரை 6, திட்டக்கட்டுரை

4. புறமதிப்பீட்டுப் பருவத் தேர்வு 75 என மொத்தம் 100 மதிப்பெண்கள் ஒவ்வொரு தாளுக்கும் உரியது.

**6.2. வினாத்தாள் அமைப்பு:** மொத்தம் 75 மதிப்பெண்கள் கொண்ட புறமதிப்பீட்டுப் பருவத் தேர்வு வினாத்தாள் பகுதி அ, பகுதி ஆ என இரண்டு பகுதிகளைக் கொண்டமையும்.

**பகுதி: அ:-** 5 மதிப்பெண்கள் கொண்ட 5 வினாக்கள் உள் மாற்றுவினா அமைப்புடன் அமையும். எல்லாக் கூறுகளுக்கும் சம வாய்ப்பளிக்க வேண்டும்.

**பகுதி: ஆ:-** 10 மதிப்பெண்கள் கொண்ட 5 வினாக்கள் உள் மாற்றுவினா அமைப்புடன் அமையும். எல்லாக் கூறுகளுக்கும் சம வாய்ப்பளிக்க வேண்டும்.

**6.3. ஆய்வேடு:** ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே ஆய்வேட்டுப் பணியை மேற்கொள்ள வேண்டும். ஆய்வேட்டை இரண்டாம் பருவத்தில் துறை அறிவிக்கும் நாளில் அல்லது பல்கலைக்கழகப் பொது நடைமுறையின்படி துறையில் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் துறை ஆசிரியர் ஒருவரின் நெறிப்படுத்துதலின் கீழ் திட்ட ஆய்வேட்டுப்பணியை மேற்கொள்ள வேண்டும். நெறியாளர், மாணவர் ஒதுக்கீடு போன்றவை துறையின் முடிவின்பாற்பட்டது. ஆய்வேடு கணினி தட்டச்சில் 100 பக்கங்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும். 200 சொற்களுக்குக் குறையாமல் ஒரு பக்கம் அமையவேண்டும்.

அகமதிப்பீட்டிற்கு மாணவர்கள் மூன்று அளிப்புகள் நிகழ்த்த வேண்டும். முதல் அளிப்பு: ஆய்வுத்தலைப்பும் முன்பனுவலும், இரண்டாம் அளிப்பு: இயல் பகுப்பும் ஆய்வுத்திட்டமும், மூன்றாம் அளிப்பு: ஆய்வேட்டின் முதற்படியின் முன் அளிப்பு. இம்மூன்று அளிப்புகளின் மூலம் பெறப்படும் மதிப்பெண்களே அகமதிப்பீட்டு மதிப்பெண்களாகக் கொள்ளப்படும்.

அக, புற மதிப்பீட்டு முறையும் வாய்மொழித் தேர்வும் ஆய்வேட்டிற்குப் பின்பற்றப்படும்.

# முதுகலைப் பாடத்திட்டம் - 2019-2020 முதல்

**நோக்கம்:**

சங்ககாலம் முதல் தற்காலம் வரையிலானத் தமிழ் இலக்கியப் பரப்பைக் கற்பித்தல். இலக்கியத்தைப் பண்பாட்டின் உற்பத்திப் பொருளாக அறியச்செய்தல். இலக்கியத்திற்கும் சமூகத்திற்குமிடையிலான உறவுகளைப் புரிந்துகொண்டு கற்றலும் இவ்வடிப்படையில் இலக்கியத்தைக் கற்பிக்கும் திறனைப் பெறச் செய்யலும்.

**கற்றல் பயன்:**

- தமிழிலக்கியப் பரப்பு குறித்த அறிவைப் பெற்றிருத்தல்.
- இலக்கியத்தைச் சமூகப் பண்பாட்டுப் பிற்புலத்தில் நுணுகிக்காணும் திறன் பெற்றிருத்தல்.
- தொடர்ந்து இலக்கியப் பனுவல்களை வாசிக்கும் ஆர்வம் பெற்றிருத்தல்.

**முன் தேவை:**

இளங்கலைத் தமிழ்த் தேர்ச்சிப் பெற்றிருத்தல் அல்லது தமிழிலக்கியப் பரப்பு குறித்த அடிப்படையான அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

## முதல் பருவம்

| வ.எண். | தாள்கள் | கற்பித்தல் மணிகள் | மதிப்பலகுகள் |
|---|---|---|---|
| 1 | தொல்காப்பியம் – எழுத்திலக்கணம் | 4 | 4 |
| 2 | இலக்கியவியல் அடிப்படைகள் | 4 | 4 |
| 3 | இக்கால இலக்கியம் – உரைநடை | 4 | 4 |
| 4 | நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள் | 4 | 4 |
| 5 | **விருப்பத்தாள்கள்**<br>(அ) கணினி அடிப்படைகள்<br>**அல்லது**<br>(ஆ) கணினித் தமிழும் பதிப்புக் கலையும் | 3 | 3 |

## இரண்டாம் பருவம்

| வ.எண். | தாள்கள் | கற்பித்தல் மணிகள் | மதிப்பலகுகள் |
|---|---|---|---|
| 6 | தொல்காப்பியம் சொல்லிலக்கணம் | 4 | 4 |
| 7 | இக்கால இலக்கியம் – கவிதை | 4 | 4 |
| 8 | காப்பிய இலக்கியங்கள் | 4 | 4 |
| 9 | அற இலக்கியம் | 4 | 4 |
| 10 | **விருப்பத்தாள்கள்**<br>(அ) நாட்டார் பண்பாட்டு மரபுகள்<br>**அல்லது**<br>(ஆ) மொழிபெயர்ப்பியல் | 3 | 3 |
| 11 | **பிற துறைத்தாள்**<br>பயன்பாட்டுத் தமிழ் | 3 | 3 |

## மூன்றாம் பருவம்

| வ.எண். | தாள்கள் | கற்பித்தல் மணிகள் | மதிப்பலகுகள் |
|---|---|---|---|
| 12 | தொல்காப்பியம் பொருளிலக்கணம் | 4 | 4 |
| 13 | சங்க இலக்கியம் | 4 | 4 |
| 14 | சமய இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் | 4 | 4 |
| 15 | தமிழ் நாடக இலக்கியம் | 4 | 4 |
| 16 | **விருப்பத்தாள்கள்**<br>(அ) பண்பாட்டு மானிடவியல்<br>**அல்லது**<br>(ஆ) தொல்லியல் | 3 | 3 |
| 17 | **பிற துறைத்தாள்**<br>தமிழ்ப் பண்பாட்டு இயக்கங்கள் | 3 | 3 |

**நான்காம் பருவம்**

| வ.எண். | தாள்கள் | கற்பித்தல் மணிகள் | மதிப்பலகுகள் |
|---|---|---|---|
| 18 | தொல்காப்பியம் யாப்பு – அணியிலக்கணம் | 4 | 4 |
| 19 | உரைமரபும் உரையாசிரியர்களும் | 4 | 4 |
| 20 | இலக்கியத் திறனாய்வும் இலக்கியக் கொள்கைகளும் | 4 | 4 |
| 21 | தமிழிலக்கிய மானிடவியல் | 4 | 4 |
| 22 | திட்ட ஏடு | 8 | 8 |
| 23 | **விருப்பத்தாள்கள்**<br>(அ) ஒப்பிலக்கியம்<br>**அல்லது**<br>(ஆ) தமிழக வரலாறும் பண்பாடும் | 3 | 3 |

**மொத்த மதிப்பலகுகள் : 90**

## ஆய்வியல் நிறைஞர் (எம்ஃபில்) பாடத்திட்டம் - 2019-2020 முதல்

**முதல் பருவம்**

| வ.எண். | தாள்கள் | கற்பித்தல் மணிகள் | மதிப்பலகுகள் |
|---|---|---|---|
| 1. | ஆராய்ச்சி நெறிமுறைகளும் கற்பித்தல் முறையியல்களும் | 4 | 4 |
| 2. | திறனாய்வு அணுகுமுறைகள் | 4 | 4 |
| 3. | **விருப்பத்தாள்கள்**<br>(அ) உலகத் தமிழ் இலக்கியம்<br>**அல்லது**<br>(ஆ) வட்டார இலக்கியம் (பயிற்சித் தாள்) | 4 | 4 |

**இரண்டாம் பருவம்**

| வ.எண். | தாள் | கற்பித்தல் மணிகள் | மதிப்பலகுகள் |
|---|---|---|---|
| 1. | ஆய்வேடு | 12 | 12 |

**மொத்த மதிப்பலகுகள் : 24**

## தாள்களின் உள்ளடக்கம்

## முதற்பருவம்

## 1. தொல்காப்பியம் – எழுத்திலக்கணம்

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

தமிழ் எழுத்திலக்கணத்தைப் பற்றிய தெளிவான – செறிவான அமைப்பு விளக்கத்தைத் தருதல். ஒலி – எழுத்து – அசை – மெய்ம்மயக்கம் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தி, தமிழ் எழுத்தமைப்பினை விளக்குதல். சொல்திரிபு – சொல்லாக்கம் – சொல் தொடர் அமைப்புகளில் இடம்பெறும் புணர்ச்சி மாற்றங்களை முறையாக விளக்குதல். இக்கால ஒலி – ஒலியனியல் கோட்பாடுகளின் வழி சரியான ஒலி எழுத்து வேறுபாடுகளையும் ஒற்றுமைகளையும் விளக்குதல்.

எழுத்து, ஒலி பற்றிய மொழியியலின் கருத்துகளோடு தொல்காப்பிய எழுத்ததிகாரம் உடன்பட்டு, முன்னோடி மொழியியல் நூலாக இருப்பதை மாணாக்கர்களை உணரச் செய்வதும் அதன் விதிகள் நிகழ்கால மொழிப்பயன்பாட்டில் பொருந்துமிடங்களையும் விலகுமிடங்களையும் அறியச் செய்வதும் கற்கை முறையாகும்.

**கற்றல் பயன்:**

எழுத்திலக்கணத்தை மொழியியல் அடிப்படையில் புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** எழுத்திலக்கண அமைப்பு: **(12 மணிநேரம்)** எழுத்துகளின் வகைகளும், எழுத்தொலி மாற்றங்களும் – மெய்ம்மயக்கங்களும் வகைகளும்.

**அலகு: 2;** எழுத்துகள் பிறக்கும் விதம்: **(16 மணிநேரம்)** மொழிக்கு முதல், இறுதியில் வரும் எழுத்துகள் – மொழியாக்கமும் – மொழி வகையின் இயல்புகளும்.

**அலகு: 3;** சொற்கள் புணரும் நெறிமுறைகள்: **(10 மணிநேரம்)** மூவகைத் திரிபுகள் – புணர்ச்சியில் இடம்பெறும் வேற்றுமை உருபுகள் சொற்களை ஒருங்கிணைக்கும் சாரியைகள் – புணர்ச்சிகளும் இயல்புகளும்.

**அலகு: 4;** உயிர், மெய்ப் புணர்ச்சிகள்: **(14 மணிநேரம்)** அல்வழியிலும் வேற்றுமையிலும் உயிர், மெய் ஈற்றுப் புணர்ச்சிகள் – மரப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், விரவுப் பெயர்கள், தொழிற்ப் பெயர்கள், நிறைப்பெயர்கள், அளவைப் பெயர்கள், வன், மென், ஆய்தத் தொடர் புணர்ச்சிகள்.

**அலகு: 5;** இக்கால மொழியியல்: (**8 மணிநேரம்**) தொல்காப்பியர் கால இலக்கணமும் இக்கால இலக்கணப் பயன்பாடுகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் – பண்பும் பயன்பாடும் – உச்சரிப்பு, வாசிப்பு, மனப்பாடப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

**பாட நூல்கள்:**


1. இளம்பூரணர் (உ.ஆ.), 1969: தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்), சென்னை: கழக வெளியீடு.
2. தமிழண்ணல் (உ.ஆ.), 2008: தொல்காப்பியம், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
3. பரமசிவம் கு., 2011: இக்கால மொழியியல், திருச்சி: 120 கருப்பூர் சாலை, புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.


**பார்வை நூல்கள்:**


1. சண்முகம் செ.வை., 1980: எழுத்திலக்கணக் கோட்பாடுகள், அண்ணாமலை நகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம்.
2. பாலகுமார் மு., 2014: மொழியின் பொதுமைக் கூறுகள் கருத்தியல் விளக்கம், மைசூர்: இந்தியத் தேசியத் தேர்வுப்பணி.
3. பரமசிவம் கு., 2011: இக்காலத் தமிழ்மரபு, தற்காலத் தமிழ் இலக்கணம், திருச்சி: கருப்பூர் சாலை, புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.
4. அகத்தியலிங்கம் ச., 2001: தொல்காப்பிய உருவாக்கம், சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.


## 2. இலக்கியவியல் அடிப்படைகள்

| L | P | T | C |
|---|---|---|---|
| 4 | 0 | 0 | 4 |

**நோக்கம்:**

இலக்கிய உருவாக்க எண்ணத்தைத் தூண்டுதலும் இலக்கியத்தைப் பற்றிய சொல்லாடல்களைச் செய்பவராக மாற்றுவது இந்தத் தாளின் முதன்மை நோக்கம். இந்நோக்கத்தை நிறைவேற்றத் திறனாய்வின் வகைகள் மற்றும் கொள்கைகள் கற்பிக்கப்படுவதின்மூலம் திறனாய்வாளராக ஆவதற்கும் தூண்டப்படும்.

**கற்றல் பயன்:**

1. கலை, இலக்கியங்களின் அடிப்படைச் செயல்பாடுகளைப் புரிந்திருத்தல்.
2. இலக்கியங்கள் எவ்வாறு ஆக்கப்படுகின்றன என்பதை அறிந்திருத்தல்.

**அலகு: 1;** கலை, இலக்கியங்கள் தோற்றம் பற்றிய கருத்துக்கள்: **(12 மணிநேரம்)** கலைகள் அதன் வகைகள் – காட்சிக்கலை, கேட்புக்கலை, எழுத்துக்கலை – படைப்பு – புனைவு – நூல் – பனுவல் – எழுத்து பற்றிய கருத்துகள் – இலக்கியம் – சொற்பொருள் விளக்கம் – இலக்கிய வகைகள் – வாய்மொழி இலக்கியம், எழுத்திலக்கிய இயல்புகள் – வெளிப்பாட்டு வடிவங்கள், பா/பாடல்/கவிதை வடிவமும் உரைநடை வடிவமும்.

**அலகு: 2;** இலக்கிய வடிவங்களும் கூறுகளும்: **(12 மணிநேரம்)** கவிதை – சிறுகதை – புதினம் – நாடகம் – கட்டுரை – இலக்கியத்தின் உறுப்புகள்: கூற்று நிகழ்த்துநரின் இடமும் கேட்குநராக இருப்போரின் இடமும் – உணர்ச்சி – கற்பனை, வடிவம், பொருள், இலக்கிய உத்திகள்.

**அலகு: 3;** கவிதை பிறந்த கதை: **(10 மணிநேரம்)** கவிதையும் அனுபவமும் – கவிதையும் கற்பனையும் – கவிதையும் சொல்லும் – சொல்லாட்சி சிறப்பு – ஓசைச் சிறப்பு – கவிதையும் பொருளும்.

**அலகு: 4;** உவமையும் கவிதையும்: **(12 மணிநேரம்)** உருவகத்தின் வரலாறு – அகமும் புறமும் – திணைப் பிறப்பும் வளர்ச்சியும் – இலக்கியத்தின் இயல்புகள் – நுண்கலைகளும் கவிதையும்.

**அலகு: 5;** தொல்காப்பியமும் அரிஸ்டாட்டிலின் கவிதை இயலும்: **(12 மணிநேரம்)** நவீனத் தமிழிலக்கியத்தின் பண்புகள் – கவிதையின் கருத்துநிலை அடிப்படைகள் – கருத்தியல்.

**பார்வை நூல்கள்:**


1. ஞானசம்பந்தன் அ.சா., 2004: இலக்கியக்கலை, சென்னை: கழக வெளியீடு.
2. சிவத்தம்பி கார்த்திகேசு., 2011: இலக்கியமும் கருத்துநிலையும், சென்னை: என்.சி.பி.எச்.
3. மணவாளன் அ.அ., 2009: இலக்கிய ஒப்பாய்வு சங்க இலக்கியம், சென்னை: என்.சி.பி.எச்.
4. ஜானதன் கல்லர் (சிவக்குமார் ஆர்., (மொ.பெ.)), 2005: இலக்கியக் கோட்பாடு; மிகச் சுருக்கமான அறிமுகம், திருச்சி: புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.

## 3. இக்கால இலக்கியம் – உரைநடை

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

உரைநடையை வெளிப்பாட்டு வடிவமாகக் கொண்டு தமிழில் இலக்கியம் வளர்ந்த வரலாற்றையும் பின்னணிகளையும் கற்பிப்பது.

உரைநடையில் உருவான இலக்கிய வடிவங்களில் புனைகதைகளையும் நாடகங்களையும் கற்றலை இத்தாள் முன்வைக்கிறது.

**கற்றல் பயன்:**

தமிழ்ப் புனைகதைகளை நுணுக்கமாக அறிந்து விவாதிக்கும் திறன் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** உரைநடை என்னும் வெளிப்பாட்டு வடிவத்தின் தோற்றம்: **(12 மணிநேரம்)** உரைநடை புனைவுக்குரியதாக மாறிய சூழல் – தமிழ்ச் சமூகத்தின் இயக்க நகர்வுக்கேற்ப உரைநடை இலக்கியம் வளர்ந்த விதம் – தமிழ் நாவல், சிறுகதை வரலாறு. (பகுதி – அ. விற்கான வினாக்கள் கேட்கப்பட வேண்டும்)

**அலகு: 2;** அரசியல் இயக்கங்களின் பின்னணியில் புனைகதைகள்: **(10 மணிநேரம்)** கா.சி.வேங்கடரமணி: தேசபக்தன் கந்தன், ரா.சு. நல்லபெருமாள்: குருஷேத்திரம், கல்கி: பார்த்திபன் கனவு. சிறுகதைகள்: அகிலன், மு.வ, நா.பார்த்தசாரதி ஆகியோரின் 10 சிறுகதைகள்.

**அலகு: 3;** சமூக முரண்களை முன்வைத்தல்: **(12 மணிநேரம்)** தொ.மு.சி.ரகுநாதன்: பஞ்சும் பசியும், சி.சு.செல்லப்பா: ஜீவனாம்சம், பூமணி: வெக்கை.

**அலகு: 4;** உளவியல் சிக்கல்களை முன் வைத்த புனைகதைகள்: **(14 மணிநேரம்)** ஜெயகாந்தன்: பாரிசுக்குப் போ, தி.ஜானகிராமன்: அம்மா வந்தாள், ஆதவன்: காகித மலர்கள்

**அலகு: 5;** பின்காலனிய, பின் நவீனத்துவப் போக்குகள்: **(12 மணிநேரம்)** ஜெயமோகன்: ஏழாம் உலகம், இரா.முருகவேள்: மிளிர்கள், 2000 – க்குப் பின்னால் தோன்றிய அரவிந்தன், தமயந்தி, போகன் சங்கர் சிறுகதைகள்.

**பார்வை நூல்கள்:**

1. க.நா.சு., 2012: முதல் ஐந்து தமிழ் நாவல்கள், சென்னை: அமுதநிலையம்.

2. கைலாசபதி க., 1999: தமிழ் நாவல் இலக்கியம், சென்னை: குமரன் பப்ளிஷர்ஸ்.
3. சிட்டி சிவபாத சுந்தரம், 2016: தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், சென்னை: பாரிநிலையம்.
4. செல்லப்பா சி.சு., 2007: தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, சென்னை: காலச்சுவடு பதிப்பகம்.
5. சிவத்தம்பி கார்த்திக்கேசு, 1980: தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை: தமிழ் புத்தகாலயம்.
6. தோத்தாதிரி எஸ்., 1984: தமிழ் நாவல் சில அடிப்படைகள், சிவகங்கை: அகரம் பதிப்பகம்.
7. ஞானி கோவை., 2012: தமிழ் நாவல், சென்னை: காவ்யா பதிப்பகம்.
8. ராமசாமி அ., 2016: நாவல் என்னும் பெருங்களம், சென்னை: நற்றிணைப் பதிப்பகம்.
9. ஜெயமோகன், 2017: தமிழ் நவீன இலக்கியம், சென்னை: கிழக்குப் பதிப்பகம்.

## 4. நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள்

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

1. நாட்டார் வழக்காற்றியல் புலத்தை அறிமுகம் செய்தல்.
2. நமது மண்ணின் மரபுகளைப் புரிந்து கொள்ளுதல்
3. இப்புலத்தை ஒரு சமூக அறிவியல் புலமாக அறிதல்

**கற்றல் பயன்:**

நமது மண் சார்ந்த பண்பாட்டு மரபுகளைப் புரிந்துகொள்பவராகவும் அவற்றை மதிப்பவராகவும் உருப்பெறுவர்.

**அலகு: 1;** புல அறிமுகம்: **(10 மணிநேரம்)** கலைச்சொற்கள் விளக்கம் - அடிப்படைக்கலைச் சொற்கள் – கலைச்சொல் சிக்கல்கள் – நாட்டார் யார்? – வழக்காறு என்றால் என்ன – 21 வரையறைகள்.

**அலகு: 2;** எல்லையும் பரப்பும்: **(12 மணிநேரம்)** ஜான் ஹெரால்டு பிரண்வான்டின் முப்பெரும் பகுப்பு – ரிச்சர்டு எம். டார்சனின் பகுப்பு – நாட்டார் வழக்காற்றியல் புலத்தின் படிநிலைகள்: சேகரித்தல் – வகைப்படுத்துதல் ஆய்வு – வாய்மொழி வழக்காறுகளின் இயல்புகள்.

**அலகு: 3;** நாட்டார் வழக்காற்றியலும் இலக்கியமும்: **(12 மணிநேரம்)** கொள்வினை – கொடுப்பினை கவிதையின் தோற்றம் – யாப்பின் வளர்ச்சி – தொல்காப்பிய விளக்கம் – புராணக் கதைகள் - இலக்கிய வடிவங்களின் வளர்ச்சியும் மாற்றங்களும் – நாட்டார் இலக்கியத்தின் செல்வாக்கு – நாட்டார் வழக்காற்றியலும் மானிடவியலும் – நாட்டார் வழக்காற்றியலும் சமூகவியலும் – நாட்டார் வழக்காற்றியலும் மொழியியலும் – நாட்டார் வழக்காற்றியலும் வரலாறும்.

**அலகு: 4;** அடிப்படைக் கருத்தாக்கங்கள்: **(14 மணிநேரம்)** போலி வழக்காறுகள் (ப.11) – திரிபு வடிவங்கள் (ப.150) – கருவி வழக்காறுகள் (பக்.154,155) – கதைக்கூறு (ப.161) – கதை வகை (ப.163) – இழைவுக் கூறு (ப.213) – பனுவல் – சூழல் – பயன்பாடு.

**அலகு: 5;** களஆய்வு: **(14 மணிநேரம்)** ஆய்வுக்களம் தேர்வு – சிக்கலை அடையாளம் காணுதல் – நாட்டார் வழக்காற்றுப் படிமுறைகள் – களஆய்வு உத்திகள் – நேர்காணல் – உற்றுக் கவனித்தல்.

**பாடநூல்:**

லூர்து தே., 2000: நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள், பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் (தொடர்புடைய பகுதிகள் மட்டும்).

**பார்வை நூல்கள்:**


1. இராமநாதன் ஆறு., 2007: தமிழர் கலை இலக்கிய மரபுகள்: நாட்டுப்புறவியல் ஆய்வுகள், சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.
2. லூர்து தே., 1988: நாட்டார் வழக்காறுகள், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
3. லூர்து தே., 1986: நாட்டார் வழக்காற்றியல் களஆய்வு, திருநெல்வேலி: பாரிவேள் பதிப்பகம்.
4. பெருமாள் அ.கா., 1985: நாட்டாரியல் ஆய்வு வழிகாட்டி, நாகர்கோவில்: ரோகிணி பிரின்டர்ஸ்.
5. ஸ்டீபன் ஞா., 2009: தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள்: சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ்.

## 5. விருப்பத்தாள்கள்: (அ) கணினி அடிப்படைகள்

LPTC
2023

**நோக்கம்:**

1. கணினியின் அடிப்படைகளைக் கற்றுத்தருதல்.
2. கணினியின் செயல்பாட்டை மாணவர்களுக்குக் கற்பித்தல்
3. கணினியைப் பயன்படுத்த பயிற்றுவித்தல்

**கற்றல் பயன்:**

கணினியைப் பயன்படுத்தும் அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** கணிப்பொறியின் வரலாறு: **(10 மணிநேரம்)** கணிப்பொறியின் அமைப்பு – செயற்பாடு – கணிப்பொறியின் அங்கங்கள் – கணிப்பொறியின் வகைகள் – கணிப்பொறியின் பயன்பாடு – தமிழ் விசைப்பலகைகள் – வகைகள் – எம்.எஸ். ஆபிஸ் (MS Office) அறிமுகம் – உட்பிரிவுகள் – கோப்புகள் (Files) திறப்பும் பயன்பாடும் – சட்டகங்கள் – மேல்சட்டகம், கீழ்ச்சட்டகம் – நுழைதல் (Enter), தொகுத்தல் – இடமாற்றம் செய்தல், அட்டவணை, தானியங்கி அட்டவணை – கருவிகள் – தானியங்கி சரிபார்த்தல்.

**அலகு: 2;** நிரலொழுங்குகள்: **(12 மணிநேரம்)** பெயிண்ட் (Paint) நோட்பேடு (Note Pad) வேர்டு பேடு (Word Pad) எம்.எஸ் வேர்டு (MS Word) இல் நுழைவதும் வெளியேறுவதும் – Word டை இயக்குவது – விண்டோஸ் பகுதிகள் – டைப் செய்வது – பிழைகளைத் திருத்துவது – டாக்குமெண்டைத் தேக்கி வைப்பது – இணைப்பு செய்வது – அட்டவணை உருவாக்குவது.

**அலகு: 3**; எக்ஸல் நுழைவதும் வெளியேறுவதும்: **(12 மணிநேரம்)** திரையின் பகுதிகள் – தகவலைப் புகுத்துதல் – தவறுகளைத் திருத்துவது – செல்களைத் தேர்ந்தெடுப்பதும், தகவல்களை வேறு இடத்துக்கு மாற்றுவதும் – பார்மெட்டிங் செய்தல் – வொர்க் ஷீட் (Work Sheet), ஒர்க் புக் (Work Book), ஃபங்ஷன்கள் (Functions), சார்ட்ஸ் (Charts), மேக்ரோஸ் (Macrows) – டேட்டா வகைகள் – அட்டவணை உருவாக்குதல் (குறிப்பிட்ட விவரங்களை மட்டும் வடிகட்டுதல் மூலம் பெறுதல்) தயாரித்தல்.

**அலகு: 4;** பவர் பாயிண்ட் பிரசன்டேஷனை உருவாக்குவது: **(14 மணிநேரம்)** சேமிப்பது, திறப்பது, ஆபிஸ் அசிஸ்டெண்டின் செயல்முறைகள், ஸ்லைடு லே அவுட்கள் – ஸ்லைடு

மாஸ்டர்களைப் பயன்படுத்துதல் – ஸ்லைடுகளைப் பார்மட்டிங் செய்தல் – ஸ்லைடுகளில் டெக்ஸ்டைக் கையாளும் முறை – கிராஃபிக்ஸின் பயன்பாடு, கிராஃபிக்ஸ் ஆப்ஜெக்ட்களை வரையும் முறை – ஸ்லைட் ஷோவை இயக்கும் முறை – அனிமேஷன் செய்வது – ஹைபர் லிங்க் தருவது – டிவிட்டர் இயக்குமுறை.

**அலகு: 5;** அலகு 2,3,4 ல் கூறிய அடிப்படைகளைக் கொண்டு கணினியை இயக்குதல்: **(12 மணிநேரம்)** கோப்புகளை உருவாக்குதல், Work Sheet உருவாக்குதல், கணக்கிடல், விரித்துக்காட்டல், பக்க உருவாக்கப் பயிற்சி, Power Point பிரசன்டேஷன் உருவாக்குவது, Print எடுத்தல் போன்றவற்றை மாணவர்களுக்குச் செய்முறைப் பயிற்சி மூலம் கற்றுத்தருதல், மின்னஞ்சல் உருவாக்குதல், செய்திகளை அனுப்புதல், இணையதளம் குறித்து அறிமுகம் செய்தல். பதிவிறக்கம் செய்தல், சேமித்தல் போன்றவற்றைச் செய்து காட்டல்.

**குறிப்பு:** ஒரு வரி வினாக்கள் அலகு 1, 2 லிருந்து மட்டுமே கேட்க வேண்டும்.

**பாட நூல்:**

சுந்தரம் இல., 2015: கணினித்தமிழ் (Tamil Computing), சென்னை: விகடன் பிரசுரம்.

**பார்வை நூல்கள்:**

1. தணிகை அரசு எஸ்., 2000: Computer ஓர் விளக்கக் கையேடு, சென்னை: நர்மதா வெளியீடு.
2. ராஜமலர், 2000: பவர் பாயிண்ட், சென்னை: நர்மதா வெளியீடு.
3. ஆண்டோ பீட்டர் மா., 2002: தமிழும் கணிப்பொறியும், சென்னை: கற்பகம் புத்தகாலயம்.
4. சுஜாதா இராதா கிருஷ்ணன்., 1996: பாமரருக்கும் படித்தவர்க்கும் கணிப்பொறி, சென்னை: உயிர்மை பதிப்பகம்.

## 5. (ஆ) கணினித் தமிழும் பதிப்புக்கலையும்

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

கணினித் தமிழ் தொடர்பான மென்பொருட்களை அறிமுகம் செய்தல் – கணினித் தமிழைப் பரவலாக்கம் செய்தல் – பதிப்புப் பணிக்குக் கணினித் தமிழைப் பயன்படுத்தக் கற்பித்தல்

**கற்றல் பயன்:**

கணினித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தமிழில் நூலாக்கம் செய்யும் திறன் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** மென்பொருட்கள்: **(12 மணிநேரம்)** தமிழ் விசைப்பலகை – குறியியக்கம் – எழுத்துருக்கள் – தமிழைத் தட்டச்சு செய்ய உதவும் மென்பொருட்கள்

**அலகு: 2;** தமிழைத் தட்டச்சு செய்யும் முறைகள்: **(12 மணிநேரம்)** தமிழ் தட்டச்சு இயல் விருப்புகள் (டிபால்ட்) – தமிழ் எழுத்துரு குறியேற்ற மாற்றி (என்கோடிங்) – கணினி வழி அச்சு சார்ந்த சில அடிப்படைகள் – வடிவமைப்பு மென்பொருளும் தமிழ்ப் பயன்பாடும்

**அலகு: 3;** தமிழ் மென்பொருட்கள் தோன்றி வளர்ந்த வரலாறு: **(10 மணிநேரம்)** தமிழ் மென்பொருட்கள் – தமிழ்த் தொகுப்பு மென்பொருள் - தமிழ் மென்பொருள் நீட்சிகள்

**அலகு: 4;** தமிழ் மொழி ஆய்வுக் கருவிகள்: **(14 மணிநேரம்)** கணினித் தமிழாய்வு – கணினித் தமிழாய்வும் மென்பொருட்களும்

**அலகு: 5;** தமிழில் கணினிப் பதிப்புக் கலை: **(12 மணிநேரம்)** பேஜ் மேக்கர் - மென்பொருளும் பயன்படுத்தும் முறைகளும் (பயிற்சி உட்பட)

**பாடநூல்:**

சுந்தரம் இல., 2015: கணினித் தமிழ், (Tamil Computing) (அலகு 2,3 க்கு மட்டும்) சென்னை: விகடன் பிரசுரம்.

**பார்வை நூல்கள்:**


1. இளங்கோவன் மு., 2009: இணையம் கற்போம், அரியலூர்: வயல்வெளிப் பதிப்பகம்.
2. மணிகண்டன் துரை., 2008: இணையமும் தமிழும், சென்னை: நல்நிலம் பதிப்பகம்.
3. மணிகண்டன் துரை., 2011: இணையத்தில் தமிழ் தரவுத் தளங்கள், சென்னை: கௌதம் பதிப்பகம்.
4. மணிகண்டன் துரை., 2012: தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், தஞ்சாவூர்: கமலினி பதிப்பகம்.

## இரண்டாம் பருவம்

## 6. தொல்காப்பியம் சொல்லிலக்கணம்

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

சொல், சொல்லமைப்பு, சொல்வகைகளைத் தெளிவுபடுத்தி, அவை மொழியமைப்பில் பெற்று விளங்கும் பங்கினை விளக்குதல். இவற்றை அடிப்படையாகக் கொண்டும் சொற்திரிபு – சொல்லாக்க நெறிமுறைகளைப் பயன்படுத்தி மொழியமைப்பை விரிவுபடுத்துதல். தொடரியல் மற்றும் உரைக்கோவை அமைப்பினைத் தெளிவுபடுத்துதல். அதில் இடம்பெறும் அமைப்பிணக்கம் மற்றும் கருத்திணக்கத்தின் ஒருங்கிணைப்பை விளக்குதல்.

சொல் பற்றிய மொழியியலின் கருத்துகளோடு தொல்காப்பியச் சொல்லதிகாரம் உடன்பட்டு, முன்னோடி மொழியியல் நூலாக இருப்பதை மாணாக்கர்களை உணரச் செய்வதும் அதன் விதிகள் நிகழ்கால மொழிப்பயன்பாட்டில் பொருந்துமிடங்களையும் விலகுமிடங்களையும் அறியச்செய்வதும் கற்கை முறையாகும்.

**கற்றல் பயன்:**

சொல்லிலக்கண விதிகளை மொழியியல் அடிப்படையில் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** சொல்லமைப்பு விளக்கம்: (**15மணி நேரம்**) – திணை, பால், எண், இட அடிப்படையில் உயர்திணை, அஃறிணை, விரவுப் பெயர்கள் – பால், திணை ஐயங்கள் – உலக வழக்கு, செய்யுள் வழக்குச் சொற்கள் – சிறப்புப் பெயரும் இயற்பெயரும் – வழுவமைதிகள்.

**அலகு: 2;** எண் வகை வேற்றுமைகள்: (**12மணி நேரம்**) – வேற்றுமை உருபுகளின் இயல்புகளும் மயக்கங்களும் – ஆகுபெயர் வகைகள் – உயர்திணை, அஃறிணை, விரவுப் பெயர்கள் விளி ஏற்பு.

**அலகு: 3;** சொல்லின் பொது இலக்கணம்: (**11மணி நேரம்**) பொருண்மையும் பொருண்மை வகைகளும் – சொல்லின் வகைகள் – பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் – தற்கால பெயர், வினைச்சொல்லின் இயல்புகள் – இடைச்சொல், உரிச்சொல்லின் பொது இலக்கணம் – இடைச்சொல்லின் வகைகள் – உரிச்சொல்லின் பிரிவுகள் – அசைநிலைகள்.

**அலகு: 4;** எச்சச் சொற்களின் வகைகள்: (**12மணிநேரம்**) – தொகையும் தொடரும் – வேற்றுமை, உம்மை, அன்மொழி, பண்பு, வினை, உவமை, உவம உருபு – பொருள்கோள் – செய்யுள், உரைநடை மரபு வழக்குகள்

**அலகு: 5;** உரைக்கோவை: (**10 மணி நேரம்**) செய்யுள் 9 கவிதைக் கோவை அமைப்புகள்: அமைப்பிணக்கம்: கருத்திணக்கம் – இயைபு தேவை. மாணாக்கருக்குப் பெயர்ச்சொல் தொகுதி, வினைச்சொல் தொகுதி, இடைச்சொல் தொகுதி, உரிச்சொல் தொகுதிகள், அகராதிகள், நிகண்டுகள் போன்றவை உருவாக்கும் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

**பாடநூல்:**

சேனாவரையர் (உ.ஆ.), 1969: தொல்காப்பியம் – சொல்லதிகாரம், சென்னை: கழக வெளியீடு.

**பார்வை நூல்கள்:**

1. பாலகுமார் மு., 2014: மொழியின் பொதுமைக் கூறுகள் கருத்தியல் விளக்கம், மைசூர்: இந்தியத் தேசியத் தேர்வுப்பணி.
2. பரமசிவம் கு., 2011: இக்காலத் தமிழ்மரபு, தற்காலத் தமிழ் இலக்கணம், திருச்சி: புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.
3. நுஃமான் எம்.ஏ., 2007: அடிப்படைத் தமிழ் இலக்கணம், திருச்சி: புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.
4. சண்முகம் செ.வை., 1986: சொல்லிலக்கணக் கோட்பாடு – 2, தொல்காப்பியம் இரண்டாம் பகுதி, அண்ணாமலை நகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகம்.
5. கருணாகரன் கி., & சுப்பிரமணி சோ., 2009: உரைக்கோவை – பண்பும்: பயனும், கோயமுத்தூர்: கடற்குதிரைப் பதிப்பகம்.

## 7. இக்கால இலக்கியம் – கவிதை

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

1. தமிழின் சமகாலத் தமிழ்க்கவிதைப் போக்கை அதன் தமிழ்க்கவிதையியல் சார்ந்தும் மேற்கத்திய இலக்கியவியல் சார்ந்தும் புரிந்து கொள்ளுதல்.
2. சிறந்த கவிதைப் பனுவல்களையும் சிறந்த கவிகளையும் ஆழமாகக் கற்கத் தூண்டுதல்.

**கற்றல் பயன்:**

சமகாலத் தமிழ்க் கவிதையின் போக்குகளையும் நிகழ்ந்துவரும் மாற்றங்களையும் அறிந்தவராக இருத்தல்.

**அலகு: 1**: சமகாலத் தன்மை: **(12 மணிநேரம்)** தோற்றம் – நவீனத்துவ வரவு, அரசியல் பின்புலம், தேசியம், இனம், சர்வதேசியம், காலனியம், பின்காலனியம் போன்றவற்றை விளக்கிக் காட்டுதல். இவற்றோடு இணைந்து இலக்கிய இயக்கங்களின் வரவும் தாக்கமும் ஏற்பட்ட நிலையையும் விளக்குதல்

**அலகு: 2**: தேசியப் பார்வை: **(14 மணிநேரம்)** சி.சுப்பிரமணிய பாரதி, நாமக்கல் கவிஞர், கவிமணி ஆகியோரின் சிறப்பான படைப்புகளை அறிமுகம் செய்தல் – ஒவ்வொரு மாணாக்கருக்கும் பாரதியின் தேசபக்தி, சமுதாய மறுமலர்ச்சி, ஞான மார்க்கம், பெண்விடுதலை, வசன கவிதை போன்றவற்றைப் பிரித்தளித்துப் படிக்க வைத்தல். அதோடு குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியனவும் அறிமுகம் செய்தல் வேண்டும்.

தேசிய இனப்பின்னணியில் பாரதிதாசனின் கவிதைகளைப் பாரதியைப் பிரித்து வாசிப்பது போலவே வாசிக்க வேண்டும். அவரின் பின்னோடிகளில் ஒன்றிரண்டு பேரை (சுரதா, தமிழ் ஒளி, முடியரசன்) அறிமுகம் செய்ய வேண்டும்.

இவ்விரண்டும் இணைவாகக் கண்ணதாசன், பட்டுக்கோட்டை ஆகியோர் அறிமுகம் ஆக வேண்டும்.

**அலகு: 3**: புதுக்கவிதையின் தோற்றம்: **(12 மணிநேரம்)** எழுத்து பாணிக் கவிதைகளில் – ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, மயன், பசுவய்யா ஆகியோரில் ஒருவரையும் வானம்பாடி, பாணிக் கவிதைகளில் – சிற்பி, மேத்தா, மீரா, இன்குலாப் ஆகியோரில் ஒருவரையும் ஒவ்வொரு மாணவரும் அறிமுகம் செய்து கொள்ள வேண்டும். இவ்விரண்டின் நீட்சிகளையும் கவிகள் சார்ந்து வாசிக்க வேண்டும்.

**அலகு: 4**: தலித்திய பெண்ணியக் கவிதைகளுக்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகள்: **(10 மணிநேரம்)** ஒவ்வொரு மாணாக்கரும் ஒரு தலித் கவி, ஒரு பெண் கவியின் கவிதைகளை விவாதத்திற்கு வைக்க வேண்டும். இவ்விரு போக்குக்கும் தலா 15 கவிகளின் கவிதைகள் தொகுத்து வழங்கப்படும்.

**அலகு: 5**: நவீன, பின் நவீனக் கவிதைப் போக்கை அறிமுகம் செய்தல்: **(12 மணிநேரம்)** ஒவ்வொருவரும் ஒரு கவியின் ஒரு தொகுப்பை விவாதிக்க வேண்டும் – ஞானக்கூத்தன், ஆத்மநாம், கலாப்ரியா, மனுஷ்யபுத்திரன் போன்றவர்களின் தொகுப்போடு புதிதாக எழுதும் கவிகளின் 5 கவிதைகள் அடங்கிய ஒரு தொகுப்பு உருவாக்கப்படும்.

**பார்வை நூல்கள்**


1. பாலா,1999: புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, கும்பகோணம்: அகரம் பதிப்பகம்.
2. வல்லிக்கண்ணன், 2014: புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும், சென்னை: எழுத்து பிரசுரம்.
3. நடராசன் தி.சு., 2008: கவிதையெனும் மொழி, சென்னை: என்.சி.பி.எச்.
4. இராஜமார்த்தாண்டன், 2003: நவீன தமிழ்க்கவிதை வரலாறு, சென்னை: தமிழினி பதிப்பகம்.
5. பஞ்சாங்கம் க., 2003: தலித் கவிதைகள், கும்பகோணம்: அன்னம் பதிப்பகம்.
6. பூரணச்சந்திரன் க., 2013: கவிதையியல் வாசிப்பும் விமரிசனமும், திருச்சி: புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.
7. ஜானதன் கல்லர், 2005: இலக்கியக் கோட்பாடு: மிகச் சுருக்கமான அறிமுகம், திருச்சி: புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.


## 8. காப்பிய இலக்கியங்கள்

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

1. காப்பிய இலக்கணம் அறிதல்.
2. தமிழ்க் காப்பியங்கள் தரும் செய்திகளை உணர்த்துதல்.
3. காப்பியங்கள் தோன்றிய சமுதாயச் சூழலை அறிதல்.

**கற்றல் பயன்:**

தமிழ்க் காப்பிங்களின் வளர்ச்சிப் போக்கையும் நெடுங்கதை வரலாற்றுத் தன்மைகளையும் அறிந்தவராக இருத்தல்.

**அலகு: 1; (12 மணிநேரம்)** (அ) காப்பிய இலக்கணம் – தண்டியலங்காரம் – தமிழ்க் காப்பியத் தோற்றம், (ஆ) சிலப்பதிகாரம்: புகார்க்காண்டம் முழுவதும் (கட்டமைப்பினை ஆய்தல்) – (இ) மணிமேகலை: உலகவறவி புக்க காதை (95) பாடல்கள்.

**அலகு: 2; (12 மணிநேரம்)** (அ) சீவகசிந்தாமணி: கோவிந்தையார் இலம்பகம் – (ஆ) பெருங்கதை: துறவுக் காண்டம்

**அலகு: 3; (14 மணிநேரம்)** (அ) கம்பராமாயணம்: சுந்தர காண்டம்: கடல்தாவு படலம் (94 பாடல்கள்) – (ஆ) பெரியபுராணம்: மெய்ப்பொருள் நாயனார் புராணம் (50 பாடல்கள்) – சூளாமணி: நாட்டுச் சருக்கம் – கந்த புராணம்: விண்குடியேற்றுப் படலம்.

**அலகு: 4; (12 மணிநேரம்)** (அ) சீறாப்புராணம்: பாத்திமா திருமணப் படலம் – (ஆ) இரட்சணிய யாத்திரிகம்: சிலுவைப்பாடு – தேம்பாவணி: மானுக்குப் பிணை நின்ற படலம்.

**அலகு: 5; (10 மணிநேரம்)** (அ) பாரதியார்: பாஞ்சாலி சபதம் – (ஆ) கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை: மருமக்கள்வழி மான்மியம் – (இ) பாரதிதாசன்: தமிழச்சியின் கத்தி.

**பார்வை நூல்கள்:**

1. சீனிச்சாமி துரை., 1985: தமிழில் காப்பியக் கொள்கை, தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.
2. வையாபுரிப்பிள்ளை ச., 1972: காவிய காலம், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
3. காசிராஜன் இரா., 1980: உலகப் பெருங்காப்பியங்கள், சென்னை: அருள்நகர்ப் பதிப்பகம்.
4. சுப்பிரமணியன் வ.அய்., 1976: காப்பியக் கட்டுரைகள், நெல்லை: மிரானிய அச்சகம்.
5. வீராசாமி த.வே., 1988: தமிழ்க் காப்பியக் கொள்கை, சென்னை: கதிரவன் அச்சகம்.
6. இளவரசு சோம., 2010: காப்பியத்திறன், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

குறிப்பு: ஒருவரி வினாக்கள் அலகு 1,5 லிருந்து மட்டுமே கேட்க வேண்டும்.

## 9. அற இலக்கியம்

L P T C

4 0 0 4

**நோக்கம்:**

1. இலக்கியத்தின் பொதுவான நோக்கும் - பயன் நோக்கும் - அற நோக்கும் - அற இலக்கியங்கள் வழி பயிலுதல்.
2. காலந்தோறும் உருவான கருத்து மாற்றங்களையும் புத்தறங்களையும் சமய அறங்களையும் உணர்தல்.
3. அறக் கோட்பாடுகள் குறித்த ஆய்வுகளை அறிமுகப்படுத்துதல்.

**கற்றல் பயன்:**

நீதி நூல்களால் வலியுறுத்தப்பட்ட அறக் கருத்துகளையும் அன்றைய காலத்தின் தேவையையும் அறிந்தவராக இருத்தல்.

**அலகு 1:** அறக் கவிதைகள்: **(12 மணிநேரம்)** திருக்குறள் (அறத்துப்பால் – தீவினை அச்சம், பொருட்பால் – குடிமை, காமத்துப்பால் – தனிப்படர் மிகுதி (30)), நாலடியார் (கூடா நட்பு (10)), நான்மணிக்கடிகை (11 – 20), பழமொழி நானூறு (11 முதல் 20 முடிய), கொன்றை வேந்தன் (11 - 25).

**அலகு 2: (12 மணிநேரம்)** (அ) திரிகடுகம்: 5 பாடல்கள் ((97,20,42,43,94) 1. வாளை மீன் உள்ளல் 2. ஆசை பிறர்கட் படுதலும் 3. கழகத்தால் வந்த பொருள் 4. உயிர் அடங்குதல் 5. நண்பில்லார் மாட்டு) – (ஆ) இன்னா நாற்பது: 5 பாடல்கள் ((5,13,22,25,40) 1. சிறையில் கரும்பினை 2. மணியிலாக் குஞ்சரம் 3. யானையின் மன்னரைக் 4. நட்டார் இடுக்கண் 5. அடக்கமுடையவன் மீளிமை) – (இ) இனியவை நாற்பது: 5 பாடல்கள் (1. மான மழிந்தபின் 2. குழவி தளர்நடை 2. நட்டார்ப் புறங்கூறான் 4. குயவரைக் கையிகந்து இளமையை மூப்பென்று) – (ஈ) முதுமொழிக்காஞ்சி: 5 பாடல்கள் (1. அறிவுப்பத்து: 2,3, 2. பழியாபத்து: 3,4, 3. நல்கூர்ந்த பத்து: 9).

**அலகு 3: (14 மணிநேரம்)** (அ) ஆசாரக்கோவை: 95 முதல் 100 ஆவது பாடல் முடிய – (ஆ) சிறுபஞ்சமூலம்: 16, 24, 37, (பிழைத்தல் பொறுத்தல், வடிவிளமை வாய்ந்த, மயிர் வனப்பும் கண்கவரும்) – (இ) நீதி நெறி விளக்கம்: 251 – 270 வரையுள்ள 20 பாடல்கள், ('செவிசுட' எனத்

தொடங்கும் பாடல் முதல் பெற்ற சிறுக' என்ற பாடல் வரை) – (ஈ) அறநெறிச் சாரம்: 168 – 177 வரையுள்ள 10 பாடல்கள்

**அலகு 4: (10 மணிநேரம்)** வேதநாயகரின் நீதி நூல்: மாதரைப் படிப்பித்தல்: (கைக்கூலி) 10 பாடல்கள் – பாரதியார்: புதிய ஆத்திச்சூடி – பீர்முஹம்மது ஒலியுல்லாவின் மெய்ஞ்ஞானப் பாடல்கள்: ஞான மணிமாலை: 10 பாடல்கள் (86 – 95).

**அலகு 5: (12 மணிநேரம்)** தமிழில் அற இலக்கியங்களின் தோற்றம் – சமுதாய அரசியல் சூழல் காலந்தோறும் அறம் குறித்த பார்வைகள் மாறி வருதல் – சமயம் சார்ந்த, சாராத அறங்களின் மதிப்பீடுகள் – அறக் கோட்பாடுகள் குறித்த ஆய்வாளர் கருத்துக்கள். (ஆ. வேலுப்பிள்ளை, ராஜ்கௌதமன் எழுத்துக்களின் அடிப்படையில்)

**பாடநூல்கள்:**


1. வேலுப்பிள்ளை ஆ., 1985: தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், சென்னை: பாரி புத்தகப் பண்ணை. (அறநெறிக்காலம் மட்டும்)
2. ராஜ் கௌதமன், 1997: அறம் அதிகாரம், கோவை: விடியல் பதிப்பகம்.
3. ஷெய்கு பீர்முஹம்மது ஒலியுல்லா, 1995: மெய்ஞ்ஞானப் பாடல்கள், கன்னியாகுமரி: அஞ்சுவன்னம் பீர்முஹம்மதிய்யா முஸ்லீம் அசோசியேசன்.


**பார்வை நூல்கள்:**


1. சுப்பிரமணிய ஐயர் ஏ.வி., 1971: தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, சென்னை: அமுத நிலையம்.
2. மீனாட்சி சுந்தரம் தெ.பொ., 1969: சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, கோவை: காலைக்கதிர்.
3. ராமகிருஷ்ணன் எஸ்., 1980: திருக்குறள் ஒரு சமுதாயப் பார்வை, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
4. மாதவன் சு., 2001: தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த சமண அறங்களும், தஞ்சாவூர்: செம்மொழிப் பதிப்பகம்.
5. ராஜ்கௌதமன், 2008: தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், கோவை: விடியல் பதிப்பகம்.


**குறிப்பு:** ஒரு வரி வினாக்கள் அலகு 1, 4 லிருந்து மட்டுமே கேட்க வேண்டும்.

## 10. விருப்பத் தாள்கள்: (அ) நாட்டார் பண்பாட்டு மரபுகள்

L P T C
3 0 0 3

**நோக்கம்:**

1. நாட்டார் மரபுகளை அறிமுகம் செய்தல்
2. நாட்டார் மரபுகள் சமூகப் பண்பாட்டு வாழ்வோடு கொண்டுள்ள தொடர்புகளை உணர்த்துதல்.
3. மரபுகளின் தொன்மையையும் அவற்றின் நிகழ்காலப் பரிமாணங்களையும் அறியச் செய்தல்.

**கற்றல் பயன்**:

நாட்டார் மரபுகளின் பொருண்மையையும் அவை சமூக பண்பாட்டு வாழ்வியலோடு கொண்டுள்ள தொடர்புகளையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** வாய்மொழி இலக்கியங்கள்: **(12 மணிநேரம்)** கதைகள் – பாடல்கள்: தாலாட்டு, தெம்மாங்கு, திருமணப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், கதைப்பாடல்கள் – கதைகள் – பழமொழிகள் – விடுகதைகள்.

**அலகு: 2;** நாட்டார் நிகழ்த்துக் கலைகள்: **(12 மணிநேரம்)** தெருக்கூத்து – பாவைக் கூத்து – கணியான் கூத்து – கழைக்கூத்து – வில்லுப்பாட்டு – ஒயிலாட்டம் - தேவராட்டம் – கரகாட்டம் – சேவையாட்டம் ஆகியவற்றின் வடிவம் – உள்ளடக்கம் – நிகழ்த்தப்பெறும் சூழல் – நிகழ்த்தும் மரபு – சடங்கியல் உறவுகள்.

**அலகு: 3;** நாட்டார் வழிபாடுகள்: **(14 மணிநேரம்)** நாட்டார் சமயத்தின் செயல்பாடுகள் – புராணக் கதைகள் – தெய்வங்களின் வகைகள்: சிறு தெய்வம் – பெருந்தெய்வம் – கொலையில் உதித்த தெய்வங்கள் – தாய்த் தெய்வங்கள் – பாலூட்டும் தாய் – கொல்லும் தாய் – வழிபாட்டு இடங்கள் – சடங்கியல் நிகழ்த்துதல்கள் – சிலைகள் – பலிகளின் வகைகள் – வழிபடுவோர்.

**அலகு: 4;** ஆவியியம்: **(12 மணிநேரம்)** கோட்பாடும், தாக்கமும் குறைபாடுகளும் – நம்பிக்கைகள் – பழக்கவழக்கங்கள் – நாட்டார் விளையாட்டுகள் – உயிரியம் – குலக்குறியியம் – குலக்குறியியத்தின் இயல்புகள் – குழுக் குலக்குறியியம் – தமிழகத்தில் குலக்குறியியம் – குலக்குறியிய முறை.

**அலகு: 5;** புழங்குப் பொருள்சார் பண்பாடு: **(10 மணிநேரம்)** கைவினைக் கலைகள் – மண்பாண்டக் கலை – கட்டிடக் கலை – உருவாரங்கள் – தொழில் நிலை வழக்காறுகள் – கலைஞர்கள் – நாட்டார் உணவு – சமையல் மரபு – நம்பிக்கைகள் – பரிமாறும் முறை.

**பாடநூல்:**

லூர்து தே., 2000: நாட்டார் வழக்காற்றியல்:சில அடிப்படைகள், பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம். (தொடர்புடைய பகுதிகள் மட்டும் ).

**பார்வை நூல்கள்:**


1. சிவசுப்பிரமணியம் ஆ., 2010: மந்திரமும் சடங்குகளும், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
2. ஸ்டீபன் ஞா., 2009: தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள், சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ்.
3. சண்முக சுந்தரம் க., 1994: நாட்டுப்புற இயல், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
4. தனஞ்செயன் ஆ., 1996: குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், பாளையங்கோட்டை: அபிதா பப்ளிகேஷன்ஸ்.
5. பெருமாள் அ.கா., 1995: நாட்டாரியல் ஆய்வு வழிகாட்டி, நாகர்கோவில்: ரோகிணி பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்.
6. வானமாமலை நா., 1964: தமிழர் நாட்டுப் பாடல்கள், சென்னை: என்.சி.பி.எச்.


## 10. (ஆ) மொழிபெயர்ப்பியல்

| L | P | T | C |
|---|---|---|---|
| 3 | 0 | 0 | 3 |

**நோக்கம்:**

மொழிபெயர்ப்பின் அடிப்படைகள் – உட்கூறு மற்றும் வகைகளை அறிமுகம் செய்தல் – மொழிபெயர்ப்புப் பயிற்சியளித்தல் – கோட்பாடுகள் மற்றும் வரையறைகளை அறியச் செய்தல்.

**கற்றல் பயன்:**

மொழிபெயர்ப்பு குறித்த நுட்பங்களை அறிந்தவராக மொழிபெயர்ப்புத் திறன் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** மொழிபெயர்ப்பு வரையறைகள்: **(12 மணிநேரம்)** பல்வகை விளக்கங்கள் – மூலமொழி, இலக்கு மொழி – மொழிபெயர்ப்பின் பயன்கள், நோக்கம், இயல்புகள், சிக்கல்களின் வகைகள் – மொழிபெயர்ப்பின் வகைகள்.

**அலகு: 2;** மொழிபெயர்ப்பாளரின் தகுதிகள்: **(12 மணிநேரம்)** மொழிபெயர்ப்பாளரின் உத்திகள் - ஒலிபெயர்ப்பு – கவிதை மொழிபெயர்ப்பு – பத்திரிகை மொழிபெயர்ப்பு – வானொலி மொழிபெயர்ப்பு.

**அலகு: 3;** அறிவியல் மொழிபெயர்ப்பு: **(12 மணிநேரம்)** இயந்திர மொழிபெயர்ப்பு – கணினி மொழிபெயர்ப்பு – புனைகதை மொழிபெயர்ப்பு – நாடக மொழிபெயர்ப்பு.

**அலகு: 4;** தென்னிந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு: **(14 மணிநேரம்)** பாரதியின் மொழிபெயர்ப்பு – பகவத் கீதை மொழிபெயர்ப்பு – விவிலிய மொழிபெயர்ப்பு – ஆட்சி ஆவணங்கள் மொழிபெயர்ப்பு – மொழிபெயர்ப்பாளர்கள்.

**அலகு: 5; (10 மணிநேரம்)** மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்

**பாடநூல்:**

ஈஸ்வரன் ச., 2015: மொழிபெயர்ப்பியல், சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ்.

**பார்வை நூல்கள்:**

1. பட்டாபிராமன் கா., 2009: மொழிபெயர்ப்புக்கலை,சென்னை: என்.சி.பி.எச்.
2. கிருஷ்ணன் என்., 2012: மொழிபெயர்ப்பியல், சென்னை: செம்மூதாய் பதிப்பகம்.
3. சந்திரன் வீ., 2000: மொழிபெயர்ப்பியல் சிக்கல்களும் தீர்வுகளும், சென்னை: ராஜகுமார் பதிப்பகம்.
4. சிவகாமி ச., 2004: மொழிபெயர்ப்புத் தமிழ், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
5. பூரணச்சந்திரன் க., 2003: நவீன மொழிபெயர்ப்புக் கொள்கைகள், தஞ்சாவூர்: அகரம் பதிப்பகம்.
6. முருகேசபாண்டியன் ந., 2008: மொழிபெயர்ப்பியல், திருச்சி: உயிரெழுத்துப் பதிப்பகம்.

# 11. பயன்பாட்டுத் தமிழ் (பிற துறைத்தாள்)

L P T C
3 0 0 3

**நோக்கம்:**

அலுவலகம் மற்றும் பொதுத் தொடர்புகளில் தமிழ் மொழியினை மாணவர்கள் செம்மையாகப் பயன்படுத்திடப் பயிற்சியளித்தல்.

**கற்றல் பயன்:**

தமிழைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்திக் கருத்தாடல் செய்யும் திறன் பெற்றிருத்தல்.

**அலகு: 1**: கடிதங்கள்: **(12 மணிநேரம்)** கடித வகைகள் – கடிதங்களை எழுதும் முறை

**அலகு: 2**: ஆவண எழுத்து: **(12 மணிநேரம்)** ஒப்பந்தங்கள் – விளக்கம் – தன்மைகள் – வகைகள் – நிர்வாகம், பதிவு, நிதி சார்ந்த ஒப்பந்தங்கள் – ஒப்பந்த அமைப்பு முறை.

**அலகு: 3**: விளம்பர எழுத்து: **(12 மணிநேரம்)** விளம்பரத் தமிழ் – விளக்கம் - விளம்பர வகைகள் – அறிவிப்புகள் – சுவரொட்டிகள் – விளம்பரங்களை எழுதும் முறை – அமைப்பு முறை – விளக்கம்

**அலகு: 4**: உரையாடல்: **(14 மணிநேரம்)** உரையாடல் பயிற்சி – உரையாடல் களன்கள் – அன்றாட நிகழ்வுகள் உரையாடலாகும் நிலை – கட்டுரைகள் - கட்டுரை வகைகள் – பொதுக் கட்டுரை, ஆய்வுக் கட்டுரை, செய்திக் கட்டுரை – விளக்கம் – நூல், நூலாக்க முறைகள்.

**அலகு: 5**: **(10 மணிநேரம்)** பிழையின்றித் தமிழ் எழுதல் – அகராதிப் பயன்பாடு

**குறிப்பு:** ஒருவரி வினாக்கள் அலகு 1,4 லிருந்து மட்டுமே கேட்க வேண்டும்

**பாட நூல்கள்:**


1. பட்டாபிராமன் கா., 2004: மொழிப்பயன்பாடு, சென்னை: என்.சி.பி.எச்.
2. விநாயக மூர்த்தி அ., 2010: விளம்பரக்கலை, வேலூர்: பாலமுருகன் பதிப்பகம்.
3. நுஃமான் எம்.ஏ., 2007: அடிப்படைத் தமிழ் இலக்கணம், திருச்சி: அடையாளம் பதிப்பகம்.

**பார்வை நூல்கள்:**


1. பரசுராமன் த., 2013: சொல்திறன் விளையாட்டு, புதுவை: புதுவை மனிதவள மேம்பாட்டு மையம்.
2. இராமலிங்கம் அரங்க க., 2007: பயன்பாட்டுத் தமிழ், சென்னை: சென்னை பல்கலைக்கழகம்.
3. சிவத்தம்பி கார்த்திகேசு., 2007: அடிப்படை எளியத் தமிழ் இலக்கணம், சென்னை: குமரன் புத்தக இல்லம்.


## மூன்றாம் பருவம்

## 12. தொல்காப்பியம் – பொருளிலக்கணம்

L P T C

4 0 0 4

**நோக்கம்:**

உலக மொழிகள் பலவற்றில் மொழியமைப்பு தொடர்பான இலக்கண விளக்கமே முதன்மைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் தமிழ் இலக்கண விளக்கம் எழுத்து, சொல், பொருள் எனும் முப்பெரும் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ளதை உரிய முறையில் விளக்குதல். ஆக, புறத்திணையியல்களின் பாகுபாட்டைத் தெளிவுபடுத்துதல். இவற்றின் வாயிலாகக் கவிதையை வாழ்வியலோடு இணைத்த பண்பும் பயனும் பற்றித் தெளிவான விளக்கம் தருதல்.

**கற்றல் பயன்:**

பொருளிலக்கணத்தின் இன்றியமையாமையை உணர்ந்து தமிழ் மரபுவழி கவிதையின் நுட்பங்களை அறிந்து விளக்கும் திறன் பெற்றிருத்தல்.

**அலகு: 1;** பொருள் இலக்கணம்: **(12 மணிநேரம்)** அதன் தனித்தன்மை. நோக்கம் - அதன் கட்டமைப்பு – தொல்காப்பியப் பொருளதிகாரத்தைச் செய்யுளியல் கவிதையியலென்னும் முதன்மை நோக்கத்தில் கற்பிக்கும் அடிப்படைகள்

**அலகு: 2;** பொருள் இலக்கணப் பிரிவுகள்: **(12 மணிநேரம்)** அகப்பொருள் இலக்கணம் புறப்பொருள் இலக்கணம். எழுதிணைக் கோட்பாடு.

**அலகு: 3;** அகத்திணையியல்: **(10 மணிநேரம்)** அதன் உட்பிரிவுகள் (களவியல், கற்பியல், பொருளியல்…………)

**அலகு: 4;** புறத்திணையியல்: **(14 மணிநேரம்)** அதன் உட்பிரிவுகள் (திணைப் பாகுபாடு: வெட்சி, உழிஞை, வாகை, தும்பை, காஞ்சி, பாடாண், நொச்சி……) புறத்திணையின் வளர்ச்சி, ஏழுதிணைகளைப் பன்னிரண்டாக வளர்த்தலின் பின்னணிகள்.

**அலகு: 5;** கவிதையின் உள்நுட்பங்கள்: **(12 மணிநேரம்)** உவமயியல், மெய்ப்பாட்டியல் ஆகியனவற்றைக் கற்பித்தல், மரபியல் செய்திகளைக் கவிதை உருவாக்கப் பின்னணியில் உதவும் மொழிக்கூறுகளாகவும் பிறவுமாகக் கற்பித்தல்.

**பாட நூல்:**

பேராசிரியர் (உ.ஆ.), 1969: தொல்காப்பியம் பொருளதிகாரம் (செம்பதிப்பு), சென்னை: கழக வெளியீடு.

**பார்வை நூல்கள்:**


1. இளம்பூரணர் (உ.ஆ.), 1969: தொல்காப்பியம் பொருளதிகாரம், சென்னை: கழக வெளியீடு.
2. சுந்தரமூர்த்தி கு., 2011: தொல்காப்பியம் பொருளதிகாரம், சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
3. சுப்பு ரெட்டியார் ந., 1981: அகத்திணைக் கொள்கைகள், சென்னை: பாரி நிலையம்.
4. அறவாணன் க.ப., 1978: அற்றை நாள் காதலும் வீரமும், சென்னை: பாரி நிலையம்.
5. மாணிக்கம் வ.சுப., 2005: தமிழ் காதல், சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.
6. தமிழண்ணல், 2003: சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்), மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
7. அகத்தியலிங்கம் ச., 2001: தொல்காப்பிய உருவாக்கம், சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.


## 13. சங்க இலக்கியம்

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

நீண்ட சங்க காலக் கவிதைப் போக்கை அதன் கவிதையியல் சார்ந்து புரிந்து கொள்ளுதல்.

**கற்றல் பயன்:**

சங்கப் பாடல்களின் பாடுபொருள் நுட்பங்களைக் கவிதையியல் அடிப்படையில் அறிந்தவராக இருத்தல்.

**அலகு 1:** அகக் கவிதைகள்: **(12 மணிநேரம்)** புணர்ச்சிக் கவிதைகள்: (குறிஞ்சி) குறுந்தொகை 5: ஔவையார் 23, 29, 158, வெள்ளிவீதியார் 58, 146 – இருத்தல் கவிதைகள்: (முல்லை) அகநானூறு 5: மதுரை மருதநில நாகனார் 34, 104, 184, ஒக்கூர் மாசாத்தியர் 324, 384 – ஊடல் கவிதைகள்: (மருதம்) கலித்தொகை 5: மருதக்கலி 66 முதல் 70 வரை – இரங்கல் கவிதைகள்: (நெய்தல்) அம்மூவனாரின் தோழிக்கு உரைத்த பத்து.

**அலகு 2:** பிரிவுக் கவிதைகள்: **(10 மணிநேரம்)** (பாலை) நற்றிணை 5: கயமனார் பாடல்கள் 12, 198, 279, 293, 325 – ஒருதலைக் காதல் (கைக்கிளை): புறநானூறு 3: பெருங்கோழி நாயகன் மகள் நக்கண்ணையார் – பொருந்தாக் காமம் (பெருந்திணை): 3: கலித்தொகை: 62, 94, 139 – நெடுநல் வாடை முழுவதும்.

**அலகு 3:** புறக் கவிதைகள்: **(12 மணிநேரம்)** (வெட்சி) நிரைப்போர் 5, 257 – 262 – வஞ்சி: நிலம் அல்லது மண்ணுக்கானப் போர் (5) 4, 7, 45, 46, 47 – உழிஞை: கோட்டைப் போர் (5) 109, 110, 217, 272, 299 – தும்பை: பெரும் போர்:(5) 300, 301, 307, 310, 311 – வாகை: போர் வெற்றி (5) 17, 35, 56, 76, 166 – பாடாண்: வெற்றித் தலைவனைப் பாடுதல் (5) 169, 173, 204, 207, 252 – காஞ்சி: போரின் இழப்பு (5) 71, 72, 73, 293, 365.

**அலகு 4:** நெடுங்கவிதைகள்: **(12 மணிநேரம்)** பதிற்றுப்பத்து: 7 ஆம் பத்து – பரிபாடல்: செவ்வேள் பற்றியவை (4) 5, 8, 9, 14 ஆகிய பாடல்கள் – முல்லைப்பாட்டு (முழுவதும்).

**அலகு 5:** நெடும் பாடல்கள்: **(14 மணிநேரம்)** பட்டினப்பாலை (முழுவதும்) – குறிஞ்சிப்பாட்டு: முதல் 50 பாடலடிகள் – மதுரைக்காஞ்சி (நகர் வருணணை).

**பார்வை நூல்கள்**


1. மாணிக்கம் வ.சுப., 1957: தமிழ்க்காதல், சென்னை: பாரி நிலையம்.
2. கைலாசபதி க., 2006: தமிழ் இலக்கியத்தில் வீரநிலைக்கவிதை, சென்னை: குமரன் புத்தக இல்லம்.
3. மாதையன் பெ., 2011: தமிழ் செவ்வியல் இலக்கியங்கள்; காலமும் கருத்தும், சென்னை: என்.சி.பி.எச்.

4. நடராசன் தி.சு., 2012: தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
5. ராமசாமி அ., 2018: செவ்வியக் கவிதையியல், திருநெல்வேலி: பதிப்புத்துறை, ம.சு. பல்கலைக்கழகம்.

## 14. சமய இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும்

L P T C
4 0 0 4

**நோக்கம்:**

1. பக்தி சார்ந்த தமிழிலக்கியப் பரப்பினை அறிமுகப்படுத்துதல்
2. சமயங்கள் உணர்த்தும் வழிபாட்டு முறைகளை உணரச் செய்தல்
3. சிற்றிலக்கியப் பரப்பை அறிதல்

**கற்றல் பயன்:**

சமயங்கள் ஆற்றியத் தமிழ்க் கொடைகள் பற்றிய புரிதலும், சமயங்கள் முன்வைத்த சமூகப் பார்வை பற்றிய புரிதலும் பெற்றவராய் இருத்தல்.

**அலகு: 1;** பக்திப் பாடல்கள்: **(12 மணிநேரம்)** திருநாவுக்கரசர்: கூற்றாயினாவாறு (10 பாடல்கள்) – திருஞான சம்பந்தர்: தோடுடைய செவியன் (10 பாடல்கள்) – சுந்தரர்: பித்தா பிறை சூடி (10 பாடல்கள்) – ஆண்டாள்: திருப்பாவை (10 பாடல்கள்) – பொய்கையாழ்வார்: முதல் திருவந்தாதி (10 பாடல்கள்).

